


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.2.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் மகளிர் நலனை மேம்படுத்திடும் வகையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையால் தயாரிக்கப்பட்ட "தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை 2024" –ஐ வெளியிட்டார்கள். இந்நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளீதரன், சமூக நலத்துறை ஆணையர் திருமதி வே.அமுதவல்லி, ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (22.2.2024) தலைமைச் செயலகத்தில், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவர் சிந்தனைச்செல்வன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.எஸ். பாலாஜி, ஜெ. முகம்மது ஷா நவாஸ், எம். பாபு, சமூக செயற்பாட்டாளர் ரமேஷ் பாபு ஆகியோர் சந்தித்து, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டிற்கான நிதி செலவிடப்படுவதை உறுதி செய்வதற்கும், அவர்களுக்கான மேம்பாட்டுச் செயல் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் சட்டம் இயற்றியதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

### தமிழ்நாட்டில் மகளிர் நலனை மேம்படுத்திடும் வகையில்

# "தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை 2024"

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

சென்னை, பிப்.23-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.2.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் மகளிர் நலனை மேம்படுத்திடும் வகையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையால் தயாரிக்கப்பட்ட "தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை 2024"ஐ வெளியிட்டார்.

சமூகத்தில் பெண்களின் வளர்ச்சியைக் கொண்டே அச்சமூகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியினை மதிப்பிட இயலும். இதன்பொருட்டு, பாலின வேறு பாட்டினைக் களைந்திடவும், பெண்களுக்கேற்ற பாதுகாப்பான சூழ்நிலையை ஏற்படுத்திடவும், பெண்களின் நிலையினை மேம்படுத்தும் வகையிலும், தமிழ்நாடு அரசு பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டி, அவற்றை சீரிய முறையில் செயல்படுத்தி, தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக திகழச் செய்துள்ளது.

முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையின் அடிப்படையில், சமூக நீதி, சமத்துவம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் போன்றவற்றின் அடிப்படையில் இம்மாநில மகளிர் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது.

இக்கொள்கையானது, 10 ஆண்டுகளுக்கு அல்லது அடுத்த புதிய கொள்கை உருவாக்கப்படும் வரை நடைமுறையில் இருக்கும். மேலும், இக்கொள்கையினை ஐந்தாண்டுகளுக்கு பிறகு மறுஆய்வு செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் மகளிர் மேம்பாட்டிற்கென தனியான ஒரு கொள்கையை வெகுசில மாநிலங்களே இதுவரை வெளியிட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

*மாநில மகளிர் கொள்கையின் முக்கிய சிறப்பம்சங்கள் குறிக்கோள்கள்:*

பாலின உணர்திறன் கொண்ட கல்விமுறையை நிறுவுதல் மற்றும் பெண்குழந்தைகளின் இடை நிற்றல் விகிதத்தைக் குறைத்தல்.

வளரிளம் பெண்கள் மற்றும் மகளிரின் ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல்.

வேலைவாய்ப்புகளில் மகளிரின் பங்களிப்பை அதிகரித்தல்.

அனைத்து அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாராத பணிகளில் உள்ள பெண் பணியாளர்களுக்கு பாதுகாப்பான மற்றும் அவர்களுக்கு உகந்த பணியிடங்களை உறுதி செய்தல்.

பெண்கள் நிர்வகிக்கும் சிறு தொழில்கள் மற்றும் அவர்கள் மேற்கொள்ளும் புதிய தொழில் முயற்சிகளுக்கு ஆதரவளித்தல்.

பெண்கள் அதிக ஊதியம் பெறும் வேலைவாய்ப்புகளை பெறுவதற்கு டிஜிட்டல் கல்வியறிவை ஊக்குவித்து டிஜிட்டல் பாலின இடைவெளியைக் குறைத்தல்.

தொழில் துறையில், பயிற்சி மற்றும் திறன்மேம்பாட்டை வழங்குவதன் மூலம் மகளிரிடையே நிலவும் திறன் இடைவெளியைக் குறைத்தல்.

நிறுவனக் கடன் வசதிகளை அணுகுதல் மற்றும் தேவைப்படும் மகளிருக்கு வங்கி கடனுதவி அதிகம் கிடைப்பதற்கு வழிவகை செய்தல்.

மகளிரை அரசியல் களத்தில் பங்கேற்க ஊக்கப்படுத்துதல்.

*செயல்படுத்துதல்*

அரசில் உள்ள பல்வேறு துறைகள் மற்றும் பங்குதாரர்களின் பங்கேற்பின் மூலம் முன்முயற்சிகள் மற்றும் திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் இந்த கொள்கையின் நோக்கத்தினை அடைய வழிவகை செய்யப்படும். இக்கொள்கையில் இணைந்துள்ள பல்வேறு துறைகள், தங்கள் திட்டங்களை கொள்கையின் நோக்கங்களுடன் இணைந்து உருவாக்க வேண்டும்.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையானது ஒருங்கிணைக்கும் துறையாக இக்கொள்கை செயல்படுத்துதலை கண்காணிக்கும். சமூக நலத்துறை இயக்குநரக அலுவலகத்தில் 'செயல்படுத்தல் மற்றும் கண்காணிப்பு அலகு' அமைக்கப்படும்.

*கண்காணித்தல்*

தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் உயர்மட்ட அளவிலான பெண்கள் உரிமைக் குழு, தொடர்புடைய பிற துறைகளுடன் இணைந்து ஆறு மாதங்களுக்கு ஒருமுறை கூடி, தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கையை செயல்படுத்துவது குறித்து ஆய்வு செய்து இடைக்கால திருத்தங்களை பரிந்துரைக்க வேண்டும். இதேபோன்று, மாவட்ட ஆட்சியர் தலைமையில், மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு, இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கொள்கையின் செயலாக்கத்தை கண்காணித்து, எதிர்கொள்ளப்படும் சவால்களை சரிசெய்ய வேண்டும்.

இக்கொள்கை, சமூகம், பொருளாதாரம் மற்றும் அரசியலில் அதிகாரப் பகிர்வை பற்றி எடுத்துரைப்பதுடன், கல்வி, வேலைவாய்ப்பு, திறன் வளர்ப்பு ஆகியவற்றில் மகளிரின் நிலையை மேம்படுத்துவதுடன், மகளிர் தங்களுக்குள் புதைந்துள்ள, இதுவரை கண்டறியாத சக்திகளை வெளிக்கொணர்ந்து பெண்கள் சுயமரியாதை யுடன் வாழ்ந்திடவும், அவர்களுக்கு பாதுகாப்பான, ஆரோக்கியமான, இலட்சியம் நிறைந்த சூழலை உருவாக்க ஏதுவாக இருக்கும்.

இந்நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளீதரன், சமூக நலத் துறை ஆணையர் திருமதி வே.அமுதவல்லி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### விழுப்புரம் மாவட்டம் – மேல்சேவூர் அருகே விபத்தில்

# உயிரிழந்த சிறுவனின் குடும்பத்திற்கு ஆறுதல் – நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

விழுப்புரம், பிப். 23-

விழுப்புரம் மாவட்டம், மேல்சேவூர் அருகே அரசு பேருந்து கவிழ்ந்த விபத்தில் உயிரிழந்த சிறுவனின் குடும்பத்திற்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிவிப்பு வருமாறு:-

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், மேல்சேவூர்(ம) அம்மன் குளத்துமேடு கிராமத்தில் நேற்று (21.2.2024) மாலை TN32N3938 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்து சாலை வளைவைக் கடக்க முயன்றபோது எதிர்பாராதவிதமாக கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் பேருந்தில் பயணம் செய்த அம்மன் குளத்துமேடு கிராமத்தைச் சேர்ந்த செல்வன் பிரவீன் குமார் (வயது 16) த/பெ. அன்பழகன் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியை அறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் பலத்த காயமடைந்து விழுப்புரம் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் செல்வன் வீனேஷ் (வயது 16) த/பெ. ஜெயராஜு என்பவருக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் அறிவுறுத்தியுள்ளேன்.

இவ்விபத்தில் உயிரிழந்த சிறுவனின் குடும்பத்திற்கும் அவருடைய உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு அவரது குடும்பத்திற்கு இரண்டு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# மதுரை வண்டியூர் கண்மாய் பகுதிகளில் – பாலம் கட்டுகிற பணிகளில் முன்னுரிமை!

## சட்டப்பேரவையில் – பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிவிப்பு!

*சென்னை, பிப்.23-*

*"மதுரை வண்டியூர் பகுதிகளிலும் பாலங்கள் கட்டுகிற பணிகளில் முன்னுரிமை அளிக்கப்படும்!" என சட்டப்பேரவையில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அறிவித்தார்.*

*சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது இதுகுறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு :-*



***கோ.தளபதி:*** *மதுரை Apollo signal-ல் மேம்பாலம் கட்டும் பணி நீதிமன்ற வழக்கின் காரணமாக நிறுத்தப்பட்டுள்ளது. வண்டியூர் கண்மாயின் கரையோரப்பகுதிகளில் ஆழமாகவும், பலமாகவும் பாதுகாப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளது. நீர்நிலைகள் பாதிக்கப்படுவதாக நீதிமன்றம் கருதுவதாக செய்திகளைப் பார்த்தோம். ஆனால், பாதுகாப்புச் சுவர் ஏற்கெனவே இருந்த கரையை விட உயரமாகவும், உறுதியாகவும் இருக்குமென்றும், மேம்பாலத்தினுடைய தூண்கள் சுமார் 200 மீட்டர் மட்டும்தான் கரையில் நிறுவப்படுகிறது. மற்றபடி எந்த விதத்திலும் நீர்நிலைகள் பாதிக்கப்படக்கூடாது என்றும், போக்குவரத்திற்கு மிகமிக அவசியமான மேம்பாலச் சாலையாக இருப்பதால், அதன் அவசியத்தினைக் கருத்தில்கொண்டு, நீதிமன்றத்திற்கு விளக்கமாக எடுத்துக்கூறி, நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் மேம்பாலப் பணியினை விரைந்து முடிக்க முன்வருவாரா?*

***அமைச்சர் எ.வ.வேலு:*** *நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் அடங்கிய வல்லுநர் குழுவால் பாலத்தினுடைய வரைபடம் அங்கீகரிக்கப்பட்டு, அரசின் சார்பாக நெடுஞ்சாலைத் துறைக்கு ரூபாய் 150 கோடி நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. புதிதாக அமையவிருக்கும் பாலம் வண்டியூர் கண்மாய் கரையில் அமையவிருப்பதால், தலைமைப் பொறியாளர், பொதுப் பணி, அவர்களுடைய தடையில்லாச் சான்று 10.11.2022 அன்று பெறப்பட்டு, ஒப்பந்ததாரர்கள் கட்டுமானப் பணிகள் மேற்கொள்வதற்காக ஒப்பந்தம் கோரப்பட்டு, 30.11.2022 அன்று ஒப்பந்தம் கோரப்பட்டு, முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரத்தால் அந்தப் பாலம் கட்டுகிற பணிகளைத் தொடக்கி வைத்தார்கள். தற்போது 10 சதவிகிதப் பணிகள் முடிந்துவிட்டன. ஆனால், இப்பொழுது அங்கே ஒரு பொதுநல வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக் கிளையில் தொடர்ந்தார்கள். அதுசம்பந்தமாக, நாம் ஏற்கெனவே, 11-1-2022 சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் counter போட்டிருக்கிறோம். அதன் அடிப்படையில் வண்டியூர் கரையை மாற்றி, அதைவிட cement concrete போடுவது, மண்சரிவைத் தடுத்து நிறுத்துவது என்ற அடிப்படையிலே ஒப்பந்தங்களில் ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம்.*

*அதுமட்டுமல்லாமல் ஒரு தடையாணையை கொடுத்திருக்கிறார்கள். தடையாணையைக்கூட பார்த்தீர்கள் என்று சொன்னால் அந்த கண்மாய் பகுதிகளை மட்டும் விட்டுவிட்டு மீதிப் பாலப் பணிகளைக் கட்டுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். மீதியளவில் பாலங்கள் கட்டுகிற பணியானது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அடுத்த hearing வருகிற பொழுது, main case-ஐ எடுத்து நடத்தி, அதற்கான அனுமதியைப் பெற்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தக் கண்மாய் பகுதிகளிலும் பாலங்கள் கட்டுகின்ற பணிகளிலே முன்னுரிமை அளிக்கப்பட்டு துறையின் சார்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.*

*இவ்வாறு விவாதம் நடைபெற்றது.*

# நெல்லை மாநகர தி.மு.க. சார்பு அணிகளின் ஆலோசனைக் கூட்டம்!

## மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில்!

*நெல்லை, பிப். 23 -*

*முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் 71 வது பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை மாநகர தி.மு.க. சார்பு அணிகளின் சார்பில் ஆலோசனை கூட்டம் மாநகர அலுவலகத்தில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில் மாநகர துணை செயலாளர் அப்துல்கையூம்,பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன் (தச்சை) நமச்சிவாயம் (நெல்லை) அன்டன் செல்லத்துரை (பாளை) துபாய் சாகுல் (மேலப்பாளையம்)மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் அலிப் மீரான் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.*

*நடைபெற்ற மாநகர தி.மு.க. சார்பு அணிகளின் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவில் சிறப்பாக நிகழ்ச்சிகளை கொண்டாடுவது தொடர்பாக மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் ஆலோசனைகளை வழங்கினார்.*

*நிகழ்வில் மாவட்ட பிரதிநிதி வேங்கை வெங்கடேஷ், தச்சை பகுதி துணை செயலாளர் ஸ்டார் முருகன், நெல்லை பகுதி பொருளாளர் பாஸ்கர், வட்டச் செயலாளர்கள் சடாமுனி, பேபி கோபால், சுப்ரித் சுப்பிரமணியன், மாநகரப் பிரதிநிதிகள் சிவா, வள்ளியின் செல்வன், கந்தன், ஜான்சன், மாநகர அணி நிர்வாகிகள் பத்மா, பிந்து செய்யது, ஆனிரேக்லண்ட், ஜோஸ் வனிதா, சுப்புலட்சுமி, கிருஷ்ணவேணி, ஷெட்டி, வழக்கறிஞர் சுரேஷ்குமார், தளபதி ஆறுமுகம், நச்சுனார் இனியன், செந்தில்குமார், வின்சென்ட் வினோத், விஸ்வநாதன், சண்முகசுந்தர், பிரேம் கணேச பெருமாள், ராமச்சந்திரன் முறுக்கு கடை கணேசன், லட்சுமணன், வெங்கடேஸ்வரன், செல்வகுமார், டைட்டஸ் கண்ணன், வினோத், ராஜா அப்பாஸ், சாதிக், சாலமோன், சோமு, சாகுல்ஹமீது, ஹமீம், சிரிப்பு சேக், அன்னராஜா, வேலாயுதம், ஐயப்பன், கார்த்திக், கழகப் பேச்சாளர்கள் மைக் மணி, பாம்பு கிருஷ்ணன், மில் குமார் உள்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.*

*நிறைவில் நெல்லை பேட்டை பகுதி அவைத்தலைவர் சுப்பையா நன்றி கூறினார்.*




நேற்று (22.02.2024) தலைமைச் செயலகத்தில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் காணொலிப் பாடங்கள் அடங்கிய மணற்கேணி இணையத்தளத்தினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் பள்ளிக்கல்வித் துறை செயலாளர் ஜெ.குமரகுருபரன், தமிழ்நாடு மாதிரி பள்ளிகள் உறுப்பினர் ஆர்,சுதன் ராமசாமி, மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் இன்று

### தகவல் தொழில்நுட்ப கருத்தரங்கை துவக்கி வைக்க வருகை தரும்!

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## கழகத்தினர் திரண்டு வந்து பங்கேற்கும்படி அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

*காஞ்சிபுரம், பிப். 23 -*

*நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் இன்று (23ஆம்) தேதி காலை நடைபெறும் யூ இமேஜின் தகவல் தொழில்நுட்ப கருத்தரங்கை துவக்கி வைக்க வருகை தரும் தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகத்தினர் திண்டு வந்து, கண்டோன்மெண்ட் பட்ரோடு அண்ணா சிலை அருகில் காலை 9.00 மணியளவில் மாபெரும் வரவேற்பு அளித்திட வேண்டும் என்று மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடு த்துள்ளார்.*

*இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:*



*இன்று (23ஆம் தேதி) காலை 10.00 மணி அளவில் ஆலந்தூர் தொகுதி, நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் உள்ள கூட்ட அரங்கில் யூஇமேஜின், தகவல் தொழில்நுட்ப கருத்தரங்கம் துவக்க விழா நடைபெறவுள்ளது.*

*இந்த துவக்க விழாவில் கழகத் தலைவர் முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று தகவல் தொழில்நுட்ப கருத்தரங்கத்தை துவக்கி வைக்கிறார்.*

*இவ்விழாவிற்கு வருகைத் தரும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் கண்டோன்மெண்ட் அண்ணா சிலை அருகில் காலை 9.00 மணியளவில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.*

*இக்கருத்தரங்கினை துவக்கி வைக்க வருகை தரும், நம்முடைய உயிரனைய தலைவர் தமிழ்நாடு முதல்வர் தலைவர் தளபதி அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் கண்டோன்மெண்ட் பட்ரோடு, அண்ணா சாலை அருகில் மேள, தாளம், பேண்டு வாத்தியம் முழங்க பிரம்மாண்ட மான வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*இந்த வரவேற்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட - மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் - தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் நிர்வாகிகள், கழக செயல் வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்றிட வேண்டும் என்று மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரையும் அழைக்கின்றேன்.*

*இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.*